# வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
## WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE

Girraween Public School, 9 Bando Road Girraween NSW 2145

# ஆண்டு 6 - பேச்சுப் போட்டி

**போட்டி நடைபெறும் திகதி: 19.05.2018 (4.00 pm)**

---

**நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.**

## தாய் மொழியே வாய்மொழியாம்.

"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்பது பழமொழி. வரைந்து வரைந்து பழகினாலே சிறந்த ஓவியத்தை ஒருவரால் வரைய முடியும். அது போல பேசப் பேசத் தான் தமிழில் திறம்படப் பேச முடியும்."பேச்சின்றி மொழியில்லை" ஒரு மொழி உயிர் வாழ வேண்டுமாயின் மக்களால் பேசப்பட வேண்டும். பேச்சு வழக்கில்லாத மொழிகள் பல அழிந்து கொண்டு வருகின்றன. ஒரு மொழி அழிய நேர்ந்தால் அம் மொழிக்குரிய இனமே அழிந்து விடும்.

நாம் எங்கே பிறந்து வளர்ந்தாலும் தமிழர்களே. தாய் மொழிப் பற்று ஒவ்வொருவருக்கும் தேவை. மொழி தவறியவன் வழி தவறியவன் ஆகின்றான். நமது மொழியை அடுத்த தலைமுறைக்கும் கடத்த வேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளது.

இன்று அவுஸ்திரேலியாவில் இருக்கின்ற தமிழ்ப் பிள்ளைகளில் குறிப்பிடக் கூடிய அளவு பிள்ளைகளுக்கு தமிழில் பேசத் தெரியாது. இது பற்றி பெற்றோர்கள் சிறிதும் கவலைப்படுவதில்லை. நம் நாட்டில் தமிழை குழந்தைகள் பேச வைப்பதற்காக தமிழ்ப் பாடசாலைகள், தமிழ் மன்றங்கள் மற்றும் வானொலிகள் போன்றன பலவழிகளில் தொண்டாற்றி வருகின்றன. பிள்ளைகள் வாரம் ஒரு நாள் இரண்டரை மணி நேரம் தமிழைக் கற்பதன் மூலம் தமிழில் பேச முடியுமா? எமது பிள்ளைகள் தமிழில் பேசும் திறன் பெற்றோர்களின் கைகளில் தான் உள்ளது.

பெற்றோர்கள் பிள்ளைகளுடன் வீட்டில் தமிழில்தான் உரையாட வேண்டும் என்று சபதம் எடுத்தால், நிச்சயம் பிள்ளைகள் தமிழில் பேசுவார்கள். பிள்ளைகளிடம் தாய் மொழியில் உரையாடுவது, உறவுகளிடையே இணக்கத்தை வலுப்படுத்துகிறது. பிள்ளைகள் தமிழில் பேசப் பேசத்தான், தமிழ் மொழியில் பேசும் ஆர்வம் அதிகரிக்கும்.

தமிழில் பேசுவோம், தமிழராய் வாழ்வோம்.

நன்றி, வணக்கம்.